## முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

# திருச்சி தெற்கு மாவட்டத்தில் கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கல்!



## மாவட்டச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!

முத்தமிழ் கலைஞர் 03.06.2026 அன்று பிறந்தநாளை முன்னிட்டு காலை 9 மணி அளவில் திருச்சி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட, மாவட்ட/மாநகர/ பகுதி /ஒன்றிய / நகர / பேரூர் கழகங்களில் கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்கும் விழா !

| வ. எண் | மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றியம், நகர, பேரூர் | தலைமை | கொடியேற்றுபவர்கள் | கொடி கம்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | திருச்சி தெற்கு மாவட்டம் | அன்பில் மகேஸ் பொய்யாமொழி | கவிஞர் சல்மா MP | 1 |
| 2 | திருச்சி கிழக்கு மாநகரம் | மு. மதிவாணன் | அன்பில் மகேஸ் பொய்யாமொழி | 1 |
| 3 | மலைக்கோட்டை பகுதி | மருந்துக்கடை R. மோகன் | B.A.நூர்கான் | 10 |
| 4 | மார்க்கெட் பகுதி | R.G.பாபு | பொன் செல்லையா | 10 |
| 5 | பாலக்கரை பகுதி | TPS.ராஜ் முகம்மது | N. தமிழ் செல்வன் | 10 |
| 6 | அரியமங்கலம் பகுதி | AMG. விஜயகுமார் | வண்ணை அரங்கநாதன் | 10 |
| 7 | கலைஞர் நகர் பகுதி | G. மணிவேல் | இரா. சந்திரமோகன் | 10 |
| 8 | காட்டூர் பகுதி | O. நீலமேகம் | K.C. பழனிச்சாமி | 10 |
| 9 | பொன்மலை பகுதி | EM. தர்மராஜ் | U. ராஜேஷ்வரன் | 10 |
| 10 | திருவெறும்பூர் பகுதி | S.சிவக்குமார் | நவல்பட்டு K. சண்முகம் | 10 |
| 11 | துவாக்குடி நகரம் | E. காயாம்பு | லீலாவேலு | 17 |
| 12 | திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம் | K.S.M.கருணாநிதி | KN. சேகரன் | 11 |
| 13 | திருவெறும்பூர் தெற்கு ஒன்றியம் | C. கங்காதரன் | இரா. மூக்கன் | 10 |
| 14 | கூத்தைப்பார் பேரூர் | MRTPK தங்கவேலு | அ.த.த. செங்குட்டுவன் | 12 |
| 15 | மணப்பாறை நகரம் | மு.ம.செல்வம் | இரா. குணசேகரன் | 27 |
| 16 | மருங்காபுரி வடக்கு | C.செல்வராஜ் | KKK. கார்த்திக் | 18 |
| 17 | மணப்பாறை ஒன்றிய | C. ராமசாமி | MR. ராஜ் மோகன் | 14 |
| 18 | மருங்காபுரி தெற்கு ஒன்றிய | C. சின்னடைக்கன் | P.M.சபியுல்லா | 15 |
| 19 | மருங்காபுரி மத்திய ஒன்றிய | R. பழனியாண்டி | V.தனசேகரன் | 15 |
| 20 | வையம்பட்டி வடக்கு ஒன்றிய | R. ஸ்ரீரெங்கன் | S.பன்னீர் செல்வம் | 10 |
| 21 | வையம்பட்டி தெற்கு ஒன்றிய | VA. ராஜேந்திரன் | M.M.மாரியப்பன் | 10 |
| 22 | பொன்னம்பட்டி பேரூர் | KA.நாகராஜ் | N.கோவிந்தராஜ் | 15 |

மேற்கண்ட நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, மாநகர, நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக தொண்டர்கள் என அனைவரும் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி,**
*செயலாளர்,*
*திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.*

## முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

# மதுரவாயல் தெற்கு பகுதிக் கழகம் சார்பில் வட்டங்கள் தோறும் 30 நிகழ்ச்சிகள்!

## பகுதிச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி அறிக்கை!

சென்னை, ஜூன் 2–

மதுரவாயல் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர் காரம்பாக்கம் க. கணபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

மதுரவாயல் தெற்கு பகுதிக் கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு 8 வட்டங்களில் 30 தொடர் நிகழ்ச்சிகள் கீழ்க்கண்ட விவரப்படி நடைபெறுகின்றது.

150வது வட்டம் 03.06.2026 காலை 10 மணியளவில், 150–வது வட்டம் போரூரில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தி – 1000 பேருக்கு பிரியாணி வழங்குதல் மற்றும் நலத்திட்டம் நிகழ்ச்சியை சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா. சுப்பிரமணியன் தொடங்கி வைக்கிறார். நிகழ்ச்சி ஏற்பாடு காரம்பாக்கம் க.கணபதி

148வது வட்டம் – 20 இடங்களில் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கும் நிகழ்ச்சிநிகழ்ச்சி ஏற்பாடு. 7.6.2026 – 1000 பேருக்கு பிரியாணி வாங்குதல் நிகழ்ச்சி ஏற்பாடு எஸ்.ரமேஷ்ராஜ்.

149வது வட்டம் 3–ஆம் தேதி காலை 7.30 மணிக்கு ஆழ்வார்திரு நகர் மெகா மார்ட் எதிரில் உள்ள அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி.

149வது வட்டம் 3–ஆம் தேதி 75 இடங்களில் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி.

149வது வட்டம்3–ஆம் தேதி மதியம் 12.00 மணிக்கு பழனியப்பா நகர், அடைகாத்தான் முதியோர் இல்லத்தில் மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சி.

149வது வட்டம் 07.06.2026 1000 பேருக்கு பிரியாணி வழங்குதல் . இடம் – ஸ்ரீதேவி குப்பம் நாற் சந்திப்பு.நிகழ்ச்சி ஏற்பாடு த.ரமேஷ்,

150வது வட்டம் 3–ஆம் தேதி 40 இடங்களில் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி நிகழ்ச்சி.

150வது வட்டம் 07.06.2026 காரம்பாக்கம், முதல் தெருவில் 1000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி. நிகழ்ச்சி ஏற்பாடு க.நரேன் கணபதி, R.S.தில்லைவாணன் .

150வது வட்டம் 15.06.2026 செட்டியார்அகரம், சென்னை நடுநிலைப் பள்ளியில் படிக்கும் 500 மாணவ, மாணவிருக்கு நோட்டு, புத்தகம் இனிப்பு வழங்கும் வழங்கும் நிகழ்ச்சி. நிகழ்ச்சி ஏற்பாடு சி.சுந்தர், S.சண்முகசுந்தரம்.

151வது வட்டம் 03.06.2026 11 இடங்களில் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி.

151வது வட்டம் 14.06.2026 1000 பேருக்கு பிரியாணி வழங்குதல் . இடம்– அண்ணா சாலை சின்ன போரூர் . நிகழ்ச்சி ஏற்பாடு அ. மோசஸ் .

151வது வட்டம் 07.06.2026 500 பேருக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி இடம் –பத்ராச்சலம் தெரு போரூர். நிகழ்ச்சி ஏற்பாடு R.சேகர்.

151வது வட்டம் 07.06.2026 1000 பேருக்கு பிரியாணி வழங்குதல் . இடம்– பூத்தப்பேடு குப்புசாமி தெரு நிகழ்ச்சி ஏற்பாடு பூத்தப்பேடு P.ரகு.

152வது வட்டம் 03.06.2026 15 இடங்களில் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி நிகழ்ச்சி ஏற்பாடு 152வது வட்ட தி.மு.க.

152வது வட்டம் 03.06.2026 பேரறிஞர் அண்ணா திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து கழக கொடியேற்றி இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி. நிகழ்ச்சி ஏற்பாடு ஜெ. பாஸ்கரன், R.கோதண்டன் .

152வது வட்டம் 07.06.2026 1000 பேருக்கு பிரியாணி வழங்குதல் . இடம்– அம்பேத்கர் சாலை வளசரவாக்கம். நிகழ்ச்சி ஏற்பாடு S. பாரதி அண்ணவேலவன், M.C.

152வது வட்டம் 10.06.2026 வளசரவாக்கம், சிவசக்தி மனநல காப்பகத்தில் மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சி . நிகழ்ச்சி ஏற்பாடு S.P.G.பிரபு.

152வது வட்டம் 14.06.2026 500 மகளீருக்கு சேலை வழங்கும் நிகழ்ச்சி இடம் – வளசரவாக்கம் நிகழ்ச்சி ஏற்பாடு A.விமல் குமார்

152வது வட்டம் 18.06.2026 500 பேருக்கு பிரியாணி வழங்குதல் . இடம்– வளசரவாக்கம். நிகழ்ச்சி ஏற்பாடு K.பீர்முகமது.

153வது வட்டம் 03.06.2026 23 இடங்களில் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி நிகழ்ச்சி.

153வது வட்டம் 07.06.2026 1000 நபர்களுக்கு வேட்டி சேலை வழங்கும் நிகழ்ச்சி நிகழ்ச்சி ஏற்பாடு தி சார்லஸ்.

153வது வட்டம் 14.06.2026 மங்களா நகர், போரூர், 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி. நிகழ்ச்சி ஏற்பாடு G.நடராஜன்.

153வது வட்டம் 21.06.2026 போரூர், தெருவீதியம்மன் கோயில் தெருவில் 800 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி. நிகழ்ச்சி ஏற்பாடு P.K.R.R.மஞ்சித் .

153வது வட்டம் 26.06.2025 போரூர் ,வன்னியர் தெருவில் 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி. நிகழ்ச்சி ஏற்பாடு S.பஷீர் .

153வது வட்டம் 28.06.2026 போரூர் , சுபஸ்ரீ நகரில் 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி. நிகழ்ச்சி ஏற்பாடு N. மாதவன்

154வது வட்டம் 03.06.2026 10 இடங்களில் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி.

154வது வட்டம் 03.06.2026 இராமாபுரம் அம்பேத்கர் சிலை அருகில் 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி. நிகழ்ச்சி ஏற்பாடு வ.செல்வகுமார்.

155வது வட்டம் 03.06.2026 7 இடங்களில் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி.

155வது வட்டம் 03.06.2026 இராமாபுரம், அரசமரம் அருகில் 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி.நிகழ்ச்சி ஏற்பாடு ராதா செல்வம்.

இவ்வாறு பகுதிக் கழகச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மதுராந்தகம் சி. ஆறுமுகம்
### ஜூன் 2 (2005)



**கழகம் துவங்கிய காலத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றவர்.**


**மதுராந்தகம் ஒன்றியச் செயலாளராகவும், தொடர்ந்து 20 ஆண்டுகள் செங்கற்பட்டு மாவட்டக் கழக செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் – தி.மு.க. அறக்கட்டளை உறுப்பினர், கழக சட்டதிட்டத் திருத்தக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளையும் வகித்தவர்.**

**மூன்று முறை மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். குறிப்பாக, 1984ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 90 பேர் இவரை எதிர்த்து போட்டியிட்ட போதும், கடுமையாக போராடி வெற்றி பெற்றவர்.**

**1949 முதல் 2005 வரை கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர். மிசா சட்டத்தில் ஒரு வருடம் சிறையில் இருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# கருணையும் நிதியும்!



**த**லைவர் கலைஞர் அவர்களின் உயர்ந்த குணங்கள், நிகழ்வுகள், எனக்கு பல நினைவில் உள்ளது. அவற்றில் ஒன்றை மட்டும், அவரது பிறந்த நாள் விழா சமயத்தில் எழுதுகிறேன்.

தமிழ்நாட்டின் முதலமைச்சராக தலைவர் கலைஞர் அவர்கள் இருந்த காலம். 1997-ம் ஆண்டில் ஒருநாள் மாலை, உயர்நீதிமன்றத்தில் நான் இருந்த வழக்கறிஞர் அறையின் (சேம்பர்) பொறுப்பு உறுப்பினர், 'நீங்கள் ரூ.17000/- ஓரிரு நாளில் கொடுங்கள், முன்பு சேம்பர் வாடகை உயர்த்தப்பட்டதால் பாக்கி நிலுவைத் தொகை' என்றார். எனக்கு மிகவும் அதிர்ச்சியாக இருந்தது. முதல்வர் கலைஞர் அவர்களிடம் முறையிடலாம் என்று எண்ணி, அண்ணா அறிவாலயம் சென்று அண்ணன் சண்முகநாதன் அவர்களிடம் கூறினேன். ஒரு மனுவாக எழுதிக் கொண்டு வாருங்கள் என்றார்.

அடுத்த நாள் ஒரு மனுவை ஒரே பக்கத்தில் தயாரித்து, உயர்நீதிமன்றத்தில் நான் நடந்து என் எதிரே வந்த வழக்கறிஞர்களிடம் பிரச்சினையை சொல்லி கையொப்பம் பெற்றேன். அண்ணன் அ.அ.ஜின்னா (நாடளுமன்ற மேலவை முன்னாள் உறுப்பினர்) அவர்களது பெயரை முதலில் போட்டு மற்றும் வழக்கறிஞர்கள் என்று கூறி, தமிழ்நாடு முதல்வர் கலைஞர் அவர்களை அண்ணா அறிவாலயம், தலைவர் அறையில் பார்த்து வணங்கினேன். அவர் 'கோர்ட்டில் என்னய்யா விசேஷம் ' என்று வழக்கம் போல கேட்டார். நான் மெதுவாக சேம்பர் வாடகை உயர்வு பிரச்சினை காரணமாக பார்க்க வந்தேன் என்றேன். பிறகு விவரம் கூறி மாத வாடகையை ரூ.1500/- என முந்தைய ஆட்சியில் உயர்த்தியுள்ளார்கள் என்றேன். முன்பு வாடகை எவ்வளவு என்றார். நான் முன்பு மாத வாடகை ரூ.100/- பதினைந்து, மடங்காக அதிகப்படுத்தப்பட்டது என்றேன். வழக்கறிஞர்கள் நன்றாக சம்பாதிக்கிறீர்களே என சிரித்துக் கொண்டே சொன்னார். நான் அனைவரும் அல்ல தலைவரே என்றேன்.

மனுவை வாங்கினார், படித்தார், சிறிது யோசித்து உடனே அந்த மனுவிலேயே, "ஏற்கனவே இருந்த வாடகையை நான்கு மடங்காக உயர்த்தலாம்" என்று எழுதி கையொப்பமிட்டார். (ரூ.400/-மாத வாடகை). நான் மிகவும் பணிவோடு மீண்டும் நிலுவைத் தொகையை பிரித்து ஒவ்வொருவரிடமும் ரூ.17,000/- கேட்கிறார்கள் என்றேன். மொத்த நிலுவைத்தொகை எவ்வளவு என கேட்டார். ரூ.3.70 கோடி (ரூபாய் மூன்று கோடியே எழுபது லட்சம்) என்றேன். இதை எப்படி தள்ளுபடி செய்ய முடியும் அரசுக்கு சிரமம் வருமே என்றார். நான் வழக்கறிஞர்களின் சிரமங்களை கருதி தாங்கள் தான் பரிவோடு உதவி செய்ய வேண்டும் என்று பணிவோடு சொன்னேன். அவர் மீண்டும் மனுவை பார்த்து, அதில் ஓரமாக எழுதி, சண்முகநாதனிடம் கொடு என்று தந்தார். அதில் அவர் "ஏற்கனவே உள்ள நிலுவைத் தொகையை வசூலிப்பதை தவிர்க்கவும்" என்று எழுதியதை படித்து என் கண்கள் குளமாகின. பணிவோடு வணங்கி, வெளியில் வந்து, அண்ணன் சண்முகநாதன் அவர்களிடம் நன்றி கூறி கொடுத்தேன். பிறகு உயர்நீதிமன்ற பதிவாளருக்கு தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகம் அரசு ஆணை அனுப்பியது. வழக்கறிஞர்கள் பலன் அடைந்தனர். அன்றைய வழக்கறிஞர்கள் சங்க நிர்வாகிகள் வியந்து, முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நன்றிகள் கூறி தீர்மானம் நிறைவேற்றினார்கள். அந்த உயர்ந்த உள்ளம் கொண்ட தானை தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா நேரத்தில் இதை குறிப்பிடுவதில் எண்ணி மகிழ்கிறேன்.

கருணையும் நிதியும் ஒன்றாய் சேர்ந்தவர் தலைவர் கலைஞர்!!

அவரை நன்றியோடு வணங்குகிறேன். தளபதி அவர்கள் வழியில் நடப்போம். கழகம் காப்போம். தமிழ்நாடு காப்போம்.

**வணக்கம் வெ.இரவி**
**தி.மு.க. சொத்து பாதுகாப்பு வழக்கறிஞர் பிரிவு தலைவர்**



## பி.எஸ்.ஆறுமுகம் தலைமையில் கலைஞர் பிறந்தநாள்!

# 183வது வட்டம்: முதியோர் இல்லத்தில் அறுசுவை உணவு!

## எஸ்.அரவிந்த் ரமேஷ் – வி.இ.மதியழகன் வழங்குகின்றனர்!

*சென்னை, ஜூன் 2-*

*முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளை முன்னிட்டு சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி 183வது வட்டத்தில் வட்ட கழக செயலாளர்கள் பி.எஸ்.ஆறுமுகம் தலைமையில் விஷ்ராந்தி ஆதரவற்ற முதியோர் இல்லத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த்ரமேஷ், பகுதி செயலாளர் வி.இ.மதியழகன், உணவு வழங்குகின்றனர்.*

*ஜூன் 3: முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு கழக தலைவர், தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி: சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி 183வது வட்ட தி.மு.க. சார்பில் வட்ட செயலாளர் பி. எஸ்.ஆறுமுகம் தலைமையில், இன்று (02.06.2026 செவ்வாய்க்கிழமை) நண்பகல் 12 மணியளவில் பாலவாக்கம் எம்.ஜி.ஆர்.சாலையில் உள்ள விஷ்ராந்தி ஆதரவற்ற பெண்கள் முதியோர் இல்லத்தில், சோழிங்கநல்லூர் மத்திய பகுதி கழக செயலாளரும், முன்னாள் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.அரவிந்த்ரமேஷ், சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி கழக செயலாளர் வி.இ.மதியழகன், ஆகியோர் அறுசுவை உணவினை வழங்குகின்றனர்.*

*இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் பாலவாக்கம் க.சோமு, மாவட்ட துணை செயலாளர்கள் த. விஸ்வநாதன், மு. மனோகரன், மாவட்ட பிரதிநிதிகள் த.விஜயபாலன், ஏ. தமிழ் செல்வன், த.சிவா, வட்டகழக நிர்வாகிகள், வி.கோபால், ஆர்.தேனப்பன், என்.வேலு, தமிமுனிஷா, ஆர். பொன் முடி, பகுதி பிரதிநிதிகள் என். பாக்கியராஜ், பி.அரிராமன், ஆர்.ஆனந்தன், ஏ.அன்சாரி பாஷா, அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மா.மகேஷ்வரன், என்.ரமேஷ்பாபு, த. வளர்மதி, ஜே.கலைச்செல்வி, கே.கண்ணகி, எஸ்.ஆனந்தி, பி.மீனாட்சி, ஏ.தேவசுதன், டி. சந்தோஷ்குமார், என். சௌந்தர், ஜே.போவாஸ், அனிஷ், பாஷித், டி.தனுஷ், பி.டேனியல், கே. செல்வகுமார், சி.மகேஷ்வரன், ஆர். எம்.முகபூப் இலியாஸ், பி.டேவிட் மனோகரன், டி.சண்முகம், எஸ்.வி. மோகன், என்.பெருமாள், ஜி. ராஜேந்திரன், ஐ. ரகமத்துல்லா, ஏ.சாதிக்பாஷா, ஏ.மோகன்ராஜ், எஸ்.பழனி,*

*ஜே.செந்தில்நாதன், பி.எஸ்.அருண்குமார், மதியழகன், விஜயகண்ணன், சேதுராஜன், நாகேஷ், வைரகண்ணு, அன்பரசன், ஐயப்பன், பாண்டுரங்கன், செல்லதுரை, ஆனந்த், மகேஷ், பழனி, ஜோஷ்வா, செந்தில்குமார், ஆறுமுகம், குமரவேல், கிருபாகரன், பாஸ்கர், ஹரி, குமார், சண்முகம், டில்லிபாபு, கோடீஸ்வரன், லோகேஷ்வரன், மீஸான், மசார், ரஹ்மதுல்லா உள்ளிட்ட கழக முன்னோடிகள், கழக நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள், பாக பொறுப்பாளர்கள், பாக முகவர்கள், பாக களப்பணியாளர்கள், பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தி.வ.விஸ்வநாதன்
### ஜூன் 2 (2023)



**தனது இளமை பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**திருவொற்றியூர் பகுதியில் வட்டச் செயலாளர், நகரச் செயலாளர், நகர பொறுப்பாளர், மாவட்ட பொருளாளர், மாவட்ட துணைச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.**

**திருவொற்றியூர் நகர்மன்ற உறுப்பினர், நகர்மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**